## மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் நாமக்கல்

## "வகுப்பறைத் தோழன்" மின்கருவி தயாரித்தல்

நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனமும், நாமக்கல் பவுல்ட்ரி டவுன் ரோட்டரி சங்கமும் இணைந்து தன்னார்வ ஆசிரியர்களுக்கு 'வகுப்பறைத் தோழன்' மின்கருவி தயாரித்தலுக்கானப் பணிமனையை 14.6.2025 அன்று நாமக்கல், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் நடத்தின.

தொடக்க விழாவில் இந்நிறுவன விரிவுரையாளர் பெ. தேவராசு வரவேற்புரைக் கூறினார். ரோட்டரி சங்கத் தலைவர் ஆர். பிரபாகரன் பணிமனையைத் தொடங்கி வைத்தார். மருத்துவர் ப.சண்முகம் மற்றும் எம். துரைசாமி வாழ்த்துரை வழங்கினார். இந்நிறுவன விரிவுரையாளர் ஏ.சிவபெருமான் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். இந்நிறுவன விரிவுரையாளர் கோ. வேதராஜபால்சன் நன்றியுரை வழங்கினார்.

நிறுவன முதல்வர் முனைவர் மு. செல்வம் பேசுகையில் மின்சாரப் பொருட்களைத் தயாரித்தலுக்கு சிறுசிறு மின்சாரப் பொருட்களின் தன்மைகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகளை விதிகளாகவும், கொள்கைகளாகவும் ஆசிரியர்கள் அறிந்திருக்கின்றனர். மின்சாரக் கருவிகள் தயாரிப்பதற்கு இதுமட்டும் போதாது என்றும், இயந்திரத் திறனும் இருந்தால் மட்டுமே மின்சாரக் கருவிகளை உருவாக்க முடியும் என்றும் கூறினார்.

ரூ. 230 மதிப்பிலான வகுப்பறைத் தோழன் மின்கருவியைக் கொண்டு, ஆசிரியரின் குரல் ஒலியைப் பெருக்கி, வகுப்பறைக் கற்பித்தலுக்குப் பயன்படுத்தவும் , நாட்டு நடப்புச் செய்திகளை அறிய ஏதுவாக இதனை பண்பலை வானொலியாகப் பயன்படுத்தவும், அகிலத் தொடர்பாட்டு கேபிள் வழியாக வலையொளியிலிருந்து (You Tube) கல்வி சார்ந்த உரைகளை மாற்றி மாணவர்கள் கேட்கவும், செல்போன்களிலிருந்து வலையொலியை (podcast) மாற்றி வலையொலி பரப்பை மேற்கொள்ளும்படி இக்கருவி தயாரிக்கப்படுகிறது. இக்கருவி, கையகல பிளாஸ்டிப் பெட்டியில் அடங்கும்படி வடிவமைப்புச் செய்யப்பட்டுள்ளதால் எளிதாக ஆசிரியர்கள் அடுத்தடுத்த வகுப்றைகளுக்கு எடுத்துச் செல்ல முடியும் என்று கருவி வடிவமைப்பாளர் ப. அருளானந்தம் கூறினார்.

மெழுகுவர்த்தி, தீப்பெட்டி, பழைய துணி, கத்திரிக்கோல், கத்தி, முடிகோதி, மார்கர் பேனா, அளவுகோல், திருப்புளி போன்ற அன்றாட நடைமுறையில் உள்ள எளிய கருவிகள் மின்சாரப் பொருட்களை வடிவமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன.

இக்கருவிக்கான தாய்ப்பலகை (mother board), மின்வழங்கி, ஒலிபெருக்கி, மின்கல மின்னூட்டி (Battery recharger) வானலை வாங்கி (antenna) , ஒலிவாங்கி (mic) போன்ற முதன்மை மின்சாரப் பொருட்கள் ' வகுப்பறைத் தோழன் ' மின்கருவியில் செயல்படும் பொருட்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

.